Ashoka Trust for Research in Ecology and the Environment

தொகுப்பு - 1, மடல் - 1
செப்டம்பர் 2010



# குளம்

## தாமிரபரணியும் அதனைச் சார்ந்த குளங்களும் - செய்தி மடல்



ஆசிரியர்
முனைவர் இரெ. கணேசன்

இணை ஆசிரியர்
மு. மதிவாணன்

உதவி ஆசிரியர்கள்
அ. சரவணன்
சி. சங்கரபாண்டியன்
பேட்ரிக் டேவிட்
ஜா. மெர்லின் ஞான ஜீவா

வடிவமைப்பு
இரா. மகேஷ் கிருஷ்ணன்

அசோகா சுற்றுச் சூழலியல் ஆராய்ச்சி நிறுவனம்,
அகத்தியமலை சமுதாயம் இயைந்த இயற்கைவளப் பாதுகாப்பு மையம்,
3/199D முக்கவர்,
மணிமுத்தாறு சாலை,
அயன்சிங்கம்பட்டி - 627416.
திருநெல்வேலி மாவட்டம்.

தொலைபேசி
04634-291809, 293387

மின்னஞ்சல்
mathi@atree.org

தலைமை அலுவலகம்:
ராயல் என்கிலேவ்,
ஸ்ரீ ராம்புரா, ஜக்கூர்,
பெங்களூர் 560 064.

இணையதளம்
www.atree.org



### குளங்களைப் பேணுவோம் ! பல்லுயிர் காப்போம் !

சீர்மிகு தமிழகத்தின் தென்மாவட்டங்களான திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகியவை எப்போதும் பசுமையாய் இருப்பதற்குக் காரணம், நமது முன்னோர்கள் மழை மற்றும் வெள்ளநீரினை சேமித்து, நீர்நிலவளத்தினை மேம்படுத்த உருவாக்கிய குளங்களும், அவற்றை கால்வாய்கள் மூலம் தாமிரபரணியோடு இணைத்துள்ளதே ஆகும். இக்குளங்கள் தன்னை நாடி வருபவரின் தேவையை உணர்ந்து வாரி வழங்கும் வள்ளல்கள் போன்று எண்ணற்ற பறவைகள், மீன்கள் என ஏனைய பல்லுயிர்களையும் ஆதரிக்கின்றன.

பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஏட்ரி ஆராய்ச்சி நிறுவனம், சிங்கம்பட்டியில் களநிலையம் அமைத்து, களக்காடு முண்டந்துறை காடு மற்றும் அதனைச் சார்ந்த சிற்றூர்களின் சூழலியல் மேலாண்மை குறித்த ஆய்வை கடந்த பல ஆண்டுகளாக நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக குளங்களின் நிலை, அவைகளைச் சார்ந்துள்ள மக்கள் மற்றும் ஏனைய பல்லுயிர்கள் பற்றியும், சூழலியல் மேம்பாடு குறித்தும் ஆராய்ச்சி செய்து வருகிறது. இந்த ஆராய்ச்சிக்கு IUCN அமைப்பின் 'ஈக்கோசிஸ்டம்ஸ் கிராண்ட்ஸ் புரோக்ராம்' உதவி செய்து வருகிறது. இப்பகுதியின் அனைத்துக் குளங்களும் வருடம் முழுவதும் உள்நாட்டுப் பறவைகள் மற்றும் பெரும் எண்ணிக்கையில் அயல் நிலப்பரப்புகளில் இருந்து வலசை வரும் பறவைகளின் வாழ்வாதாரமாகத் திகழ்வதாக அறிந்துள்ளனர்.

தற்போது இக்குளங்கள் மற்றும் அவற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகள், வளர்ச்சித் திட்டங்கள், பராமரிப்பின்மை மற்றும் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களால் சில அழிந்தும், பல அழியும் தருவாயிலும் உள்ளன. மக்கள் நெருக்கம் மற்றும் சூழலியல் சீர்கேடு மிகுந்த திருநெல்வேலி மாநகரின் நயினார்குளத்தில் பெருகும் பறவைகளின் எண்ணிக்கை, சற்று வியப்பையும், மிகுந்த மகிழ்ச்சியையும் தருகிறது. மழைநீர்ப் பிடிப்பு பகுதியும் இயற்கை அன்னையுமான பொதிகை மலையோடு இப்பகுதி மக்களை இணைக்கும் தொப்புள்கொடியாய்த் திகழும் இந்நீர்நிலைகளின் பாதுகாப்பினை மறப்போமாயின் நமது சந்ததியினர் அல்லலுறுவர் என்பது திண்ணம்.




நகரச் சூழலுக்கிடையிலும் நயினார்குளத்தில் காணப்படும் பறவைகள்

உங்கள் கைகளில் தவழும் இச்செய்தி மடலானது, வள்ளுவர் வாக்கைப் போல,

> "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு"

சேகரிக்கப்பட்ட அறிவார்ந்த செய்திகளை இயற்கை ஆர்வலர்களான தங்களுடன் பகிர்ந்துகொள்ள உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முதல் மடலில், குளங்களின் இயற்கைச் சூழல் பாதுகாப்பில் ஈடுபட்ட தன்னார்வலர்கள், ஏட்ரியின் ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்த செயல்பாடுகள் மற்றும் சிறார்களின் பங்களிப்பு பற்றிய தகவல் தொகுப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்த இயற்கை வள பாதுகாப்புப் பணியில் உங்களது எழுதும் திறன் மூலம் அனுபவங்கள் மற்றும் கருத்துக்களை ஏனையரோடு பகிர்ந்துகொள்ள அழைப்பு விடுக்கிறோம்.

வாழ்த்துக்கள்!

இரெ. கணேசன்

இதழின் உள்ளே...


| | |
|---|---|
| 'நேச்சர் டாக்கீஸ்' கலைக்குழு - குளங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் சிறார்கள் ! | 2 |
| 'பறவை மனிதன்' எனப்படும் கூந்தன்குளம் பால்பாண்டியன் | 2 |
| வைராவிகுளத்தைப் பேணிப் பாதுகாப்போம் | 2 |
| நீர்நிலைகள் பாதுகாப்பு - சட்டம் தேவை | 3 |
| குறைந்தது கோரை ! வீழ்ந்தது பாய்முடைதல் தொழில் ! | 3 |
| வாகைக்குளம் பறவைகள் பாதுகாப்பகம் ஆகுமா? ஏட்ரியின் முயற்சிகள் | 3 |
| கூவமாகிவரும் தாமிரபரணி | 4 |
| பறவைகள் கணக்கெடுப்பிற்கு அழைப்பு விடுக்கிறோம்... | 4 |
| வீற்றிருந்தான்குளம் - பறவைகள் இழந்த வாழ்விடம் | 4 |


ஸ்மிருத்தி & குளோரி

பிரசுரிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் ஆசிரியர்களுடையதே

## ‘நேச்சர் டாக்கீஸ்’ கலைக்குழு - குளங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் சிறார்கள் !

குளங்கள் நாட்டின் வளங்கள். விவசாயம் செழிக்க குளங்கள் வேண்டும். குளம் பாசனத்திற்கு மட்டுமல்லாமல், கணக்கிலடங்கா பறவைகள், தாவரங்கள் போன்ற எண்ணற்ற உயிரினங்களுக்கு வாழ்வாதாரமாகவும் மனிதர்களின் பல தேவைகளைப் பூர்த்தி செய்தும் வருகிறது. ஆனால், தற்போது குளங்கள் விளை நிலங்களாகவும், வீட்டு மனைகளாகவும், குப்பைக் கிடங்குகளாகவும் மற்றும் கழிவுநீர்த் தேக்கங்களாகவும் மாறிவருகின்றன.




பத்மநேரியில் நேச்சர் டாக்கீஸின் அரங்கேற்றம்

‘குளங்கள், குளங்களில் உள்ள பறவைகள் மற்றும் தாவரங்களைப் பாதுகாக்க வேண்டும’ என்ற கருத்தை வலியுறுத்தி ஏட்ரியின் ‘நேச்சர் டாக்கீஸ்’ கலைக்குழு, கிராமங்களில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகிறது. இந்த கலைக்குழுவில் சிங்கம்பட்டி, நாணல்குளம் மற்றும் முக்கூடல் கிராமங்களைச் சார்ந்த சுமார் முப்பது சிறுவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கு நாட்டுப்புறக் கலைகளான களியலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் வீதி நாடகங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மிகவும் புகழ் பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களான, இளங்கோ, அம்பை சண்முகம், கனகலிங்கம் மற்றும் மெர்லின் ஆகியோர் இந்த சிறுவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இதுவரை வாகைக்குளம், நாணல்குளம், பத்மனேரி, மற்றும் சிங்கம்பட்டி ஆகிய பகுதிகளில் நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன. மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்ட இவர்களுக்கு, மக்கள் தங்களுடைய பாராட்டுதல்களையும் அன்பினையும் தெரியப்படுத்தினர். மக்கள், வெறும் வார்த்தைகளில் மட்டுமின்றி, குளத்திலுள்ள உயிரினங்களைப் பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்குக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் சிறுவர்கள் தங்களது பயணத்தினைத் தொடர்ந்து வருகின்றனர்.

மு. மதிவாணன் & ஜா. மெர்லின்

## ‘பறவை மனிதன்’ எனப்படும் கூந்தன்குளம் பால்பாண்டியன்

தமிழகத்தின் இரண்டாவது பெரிய பறவைகளின் வாழ்விடமான கூந்தன்குளம் 1994ம் ஆண்டு சரணாலயமாக உருவாக்கப்பட்டது. கூந்தன்குளம் என்றாலே பறவைகளோடு நமக்கு நினைவுக்கு வருபவர் திரு.பால்பாண்டியன். கூந்தன்குளத்தின் மண்ணின் மைந்தரான இவர் தனது 14வது அகவையில் இருந்து பறவைகளின் மீது மிகுந்த நாட்டம் கொண்டார். இச்சிறு வயதிலருந்தே பறவைகளைப் பற்றி கற்றுத் தெரிந்து கொண்ட இவர், தற்போது இந்திய அளவில் பறவைகளின் சிறந்த பாதுகாவலர்களில் ஒருவராக உருவெடுத்துள்ளார்.

கூந்தன்குளத்திற்கு வரும் பறவைகளை வருடந்தோறும் கணக்கெடுப்பதுடன், தற்பொழுது வேடந்தாங்கல் சரணாலயத்திலும் பறவைகளைக் கணக்கெடுத்து வருகிறார். இதுவரையில் கூந்தன்குளத்தில் 203 பறவையினங்களை கண்டுள்ளதாகவும், கடந்த வருடம் மட்டும் 1,23,619 பறவைகள் வந்துள்ளதாகவும் கூறுகிறார். பறவைகள் மட்டுமன்றி அவைகளின் கூடுகள், முட்டைகள் மற்றும் குஞ்சுகள் ஆகியவைகளையும் கண்டறிவதில் வல்லவர்.

இவரும், இவருடைய மனைவியும் இணைந்து மரத்திலிருந்து கீழே விழுந்த குஞ்சுகளை எடுத்து வளர்த்துள்ளனர். இது வரையில் இவர் வளர்த்துள்ள குஞ்சுகளின் எண்ணிக்கை 2632. இது போல் நூற்றுக் கணக்கான மரங்களையும் இவர் நட்டு வளர்த்துள்ளார்.

தனது வாழ்வை பறவைகளுக்காக அர்ப்பணித்த இவருக்கு பல விருதுகள் கிடைத்துள்ளன. அதில் மிகவும் குறிப்பிடத்தக்கவை ‘பறவை மனிதன்’, ‘சிறகு முளைத்த மனிதன்’, ‘மூன்றாவது இறக்கை மனிதன்’, ‘பூவுலக நண்பன்’ போன்றவைகளாகும்.




மேலும், இவரை வைத்து நான்கு குறும்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் ‘வள்ளித்தாய்’ (திரு.பால்பாண்டியனின் மனைவி) என்ற குறும்படம் பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளது. இவர் பறவைகளைப் பற்றி ‘நெஸ்டிங் பிஹேவியர் ஆஃப் இந்தியன் பேர்ட்ஸ்’ என்ற நூலை எழுதியுள்ளார். தற்போது ‘தென்னிந்தியப் பறவைகள்’ என்ற நூலை எழுதி வருகிறார். இவருடைய மனைவிக்கு ‘சிறந்த சமூக சேவைப் பெண்மணி’ என்ற விருது கிடைத்துள்ளது. நமது குளங்களையும் அதில் வரும் பறவைகளையும் பாதுகாக்க பறவை மனிதன் பால்பாண்டியனைப் போல் ஊருக்கு ஒருவர் தேவை.

மு. மதிவாணன்

## வைராவிகுளத்தைப் பேணிப் பாதுகாப்போம்

தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக மணிமுத்தாறு வனப்பகுதி காணப்படுகிறது. மணிமுத்தாறு பிரதான கால்வாய் நீரால் நிரப்பப்பட்டு அங்கு வசிக்கும் மக்களின் கிராம பெயராக அமைந்த குளம் ‘வைராவிகுளம்’. இக்குளத்து நீரைச் சார்ந்து பல ஏக்கர் நிலங்கள் பயிரிடப்படுவதோடு தாமரையின் இலை மற்றும் பூ சேகரித்தல், மீன்பிடித்தல், கோரைகள் சேகரித்தல் போன்ற பல பயன்களையும் மக்கள் பெற்று வருகின்றனர்.

குளங்களைப் பாதுகாக்க கடந்த பல ஆண்டுகளாக ஏட்ரி ஆராய்ச்சி நிறுவனம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. குளக்கரைகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்குப் பலவகையான மரக் கன்றுகளை நட்டு தண்ணீர் விட்டு வளர்ப்பதோடு, பொதுப்பணித்துறை மற்றும் பஞ்சாயத்தின் உதவியுடன் குளத்தின் நடுவில் சிறு தீவு அமைத்தும் மரம் நடப்பட்டது. தற்போது அம்மரங்கள் மற்றும் அமைக்கப்பட்டுள்ள தீவும் பறவைகளைக் கவர்ந்திழுக்கின்றன. பறவைகள் அமர்ந்து




வைராவிகுளத்தின் நடுவே அமைக்கப்பட்டுள்ள தீவு

ஓய்வு எடுக்கவும், வாழிடமாகவும் இவைகளைப் பயன்படுத்துகின்றன. எதிர்காலத்தில், பெருகும் பறவைகளின் எச்சம் நீரில் கலந்து சிறந்த உரமாக பயிர்களுக்குப் பயன்பட அதிக வாய்ப்புள்ளது.

வைராவிகுளம் மற்றும் சிங்கம்பட்டி கிராமங்களைச் சார்ந்த மக்கள் சிலர் மரங்களின் பயன்கள் தெரியாமல் கால்நடைகளின் உணவிற்காகவும், விறகுக்காகவும் மற்ற தேவைகளுக்காகவும் அழிக்கின்றனர். நம் பகுதியின் விவசாயத்திற்கு நீரைப் பெறவும் பறவை-களைக் கவர்வதற்கும் மரங்கள் அவசியமாகும். வைராவிகுளத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு மேலும் பல மரங்களை வளர்த்து குளத்தையும், பறவைகளையும் அதனைச் சார்ந்த தொழில்களையும் பாதுகாப்பதற்கு எங்களுடன் இணைந்து ஒத்துழைக்க மக்களை வேண்டுகிறோம்.

வே. இராமசுப்பிரமணியன்

*குளத்தில் உள்ள நீர் வற்றும் வரையிலும், அதன் அருமை ஒருவருக்கும் தெரிவதில்லை*

-தாமஸ் ஃபுல்லர், 1732

## நீர்நிலைகள் பாதுகாப்பு - சட்டம் தேவை

நீர்நிலைகள் மனிதனுக்கு இன்றியமையாத இயற்கையின் சொத்தாகும். குளம், குட்டை, ஏரி, சதுப்புநிலம் போன்றவை நீர்நிலைகளில் அடங்கும். இவற்றிலிருந்து நீர், மீன், ஊட்டம் செறிந்த மண் மற்றும் தாவரங்கள் போன்ற அத்தியாவசியமான வளங்களைப் பெறுகின்றோம். மேலும் வெள்ள நீரினைக் கட்டுப்படுத்துதல், நிலத்தடிநீரை மேம்படுத்துதல் போன்ற இன்றியமையாத பணிகளையும் நீர்நிலைகள் செய்கின்றன.

மாறிவரும் பொருளாதார அமைப்பு மற்றும் நிலப்பரப்பு மாற்றங்களால் நீர்நிலைகள் மறைந்து வருகின்றன. மேலும் இராசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள், வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுகளால் மாசுபடுகின்றன. எனினும் இப்பெரும் சொத்தை அழிவிலிருந்து பாதுகாப்பதற்குத் தேசிய அளவில் எந்தவித பாதுகாப்புச் சட்டமும் கிடையாது. தற்போது கேரளா மற்றும் ஒரிசா மாநிலங்களில் நீர்நிலைகளைப் பாதுகாக்க சட்டம் கொண்டுவரப்பட உள்ளது. ஆனால், தமிழகத்தில் இதுவரை எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.




குளங்கள் பாதுகாப்பை வலியுறுத்தும் கிராமசபைக் கூட்டம்

நீர்நிலைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஏட்ரி, சர்வதேச இயற்கைவளப் பாதுகாப்பு அமைப்புடன் சேர்ந்து அகத்தியமலை அடிவாரங்களில் இருக்கும் குளங்களை மக்களின் ஒத்துழைப்போடு மேம்படுத்தி பாதுகாக்க செயல்திட்டம் ஒன்றை உருவாக்கி வருகின்றது. இதன் முதல்கட்டமாக அம்பாசமுத்திரம், நாங்குநேரி பகுதிகளில் ஏழு நீர்நிலைகளைத் தேர்வு செய்து அதைப் பாதுகாப்பதற்கு பொதுமக்கள், வனத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரிகளின் ஒத்துழைப்பை நாடி வருகிறது.

இம்முயற்சியின் வேறுசில அம்சங்களையும் திட்டத்தின் முன்னேற்றங்களையும் வரும் இதழ்களில் காணலாம்.

பேட்ரிக் டேவிட்




வாகைக்குளத்தைப் பார்வையிடும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ரமணசரஸ்வதி

## குறைந்தது கோரை ! வீழ்ந்தது பாய்முடைதல் தொழில் !

தாமிரபரணியும் அதனைச் சார்ந்த குளங்களும் பல்வேறு வகையில் நீர்வாழ் உயிரினங்களுக்கு மட்டுமின்றி மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றன. குறிப்பிடும்படியாக, முன்பு இப்பகுதியின் நீர்நிலைகளில் கிடைத்த பாய்க்கோரையினால் பாய்முடையும் தொழில் பலருக்கு வாழ்வாதாரமாகத் திகழ்ந்தது. பட்டு போன்ற பாயினை உருவாக்கும் பத்தமடை இப்பகுதியின் கலாச்சார அடையாளமாக இருப்பதற்குக் காரணம் இக்கோரையே ஆகும்.




பாய்முடைதலில் ஈடுபட்டுள்ள பெண்மணி

இருபது வருடங்களுக்கு முன்புவரை சிங்கம்பட்டியைச் சுற்றியுள்ள குளங்களில் ஆண்டு தோறும் நீர் நிறைந்திருப்பதோடு மட்டுமல்லாமல் கோரைகளும் அதிகளவில் இருந்ததால், பாய்முடைதல் தொழிலில் மட்டும் ஈடுபட்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை நாற்பத்தைந்துக்கும் மேல் இருந்ததாக இத் தொழிலில் ஈடுபட்டுவரும் சாகுல்ஹமீது என்பவர் சொல்கிறார். கோரைகளை அறுத்து, அளவாக நறுக்கி காயவைத்து, சாயமேற்றி, கற்றாழை நாறால் முடைந்து பின் அவர்களே விற்பனைக்கும் கொண்டு சென்றனர்.

தற்போது ஓரிரு குளங்கள் தவிர அனைத்து குளங்களும் நீரின்றி இருப்பதாலும், வேலிக்காத்தான் போன்ற களைச் செடிகளின் ஆக்கிரமிப்பாலும் கோரைகள் குறைந்த அளவே கிடைக்கிறது. கோரைகளே இல்லாத குளங்களும் இருக்கின்றன.

ஒரு காலத்தில் கோரைகளுக்காக ஆறுகள் மற்றும் குளங்களை நம்பி இருந்தவர்கள் தற்போது தாமிரபரணியின் இரு கரைகளை மட்டுமே நம்பியுள்ளனர். மேலும் கோரைகள் கரூரிலிருந்து இறக்குமதியும் செய்யபப்படுகிறது. போதிய அளவு கோரைகளின்மை, வேறு தொழில்களுக்கு மாறுதல், இயந்திரத்தின் மூலம் பாய்முடைதல் போன்ற காரணங்களால் இத்தொழில் வீழ்ச்சியடைந்து விட்டது. தற்போது இதில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெறும் மூன்று மட்டுமே.

தாமிரபரணியும் அதைச் சார்ந்த குளங்களும் இன்றளவும் நீர்வாழ் உயிரினங்களையும், மனிதனின் வாழ்வாதாரம் சார்ந்த தொழில்களையும் ஊக்குவிப்பதினால், அவற்றைப் பாதுகாத்துக் கொடுப்போம்.

அ. சரவணன்

## வாகைக்குளம் பறவைகள் பாதுகாப்பகம் ஆகுமா? ஏட்ரியின் முயற்சிகள்

எங்கள் குழு ஆந்தைகளைப் பற்றி ஆராய முள்ளிமலைக்குச் செல்லும் வழியில் வாகைக்குளத்தில் அதிக அளவில் பறவைகள் தங்கி இருந்ததைக் கண்டனர். கருவேல மரங்களின் மீது ஆயிரக்கணக்கான வக்காக்கள், கொக்குகள், அரிவாள் மூக்கன்கள் போன்ற பறவைகள் ஒலியெழுப்பியபடி மரங்களில் கூடுகட்டிக் கொண்டிருந்தன. நீரில் வாத்து இன பறவைகள், கூளக்கிடா போன்ற பறவைகள் மிகவும் ஆரவாரத்துடன் நீந்திக் கொண்டிருந்தன. ஆழ்வார்குறிச்சியிலிருந்து சுமார் மூன்று கி.மீ தொலைவில் மாலிக்நகர், வீராசமுத்திரம், நாணல்குளம் ஆகிய கிராமங்களுக்கு நடுவில் அமைந்துள்ள 'வாகைக்குளம்' ராமநதியால் நீர் பெற்று விவசாயத்திற்குப் பாசன நீரை அளித்து வருகிறது.

நாளடைவில் பறவைகளின் வகைகள், எண்ணிக்கை மற்றும் எங்கிருந்து வருகின்றன போன்ற புள்ளிவிவரங்களைச் சேகரித்ததில் திருநெல்வேலி மாவட்டத்தில் கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்திற்கு அடுத்ததாக இங்கு மட்டுமே அதிக எண்ணிக்கையில் பறவைகள் வந்து தங்குவது கண்டறியப்பட்டது. இவ்வூர் சிறார்களும் இம்முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதையடுத்து இக்குளத்தைப் பறவைகள் பாதுகாப்பகமாக மாற்ற ஏட்ரி ஆராய்ச்சி நிறுவனம் முயற்சியில் இறங்கியது. அப்பகுதி மக்கள் மற்றும் மறைந்த ஊராட்சிமன்றத் தலைவர் திரு.அசன்வாவா அவர்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு நல்கினார்கள். குளத்திலுள்ள மரங்களை குத்தகைக்கு எடுத்திருந்தவரின் ஆதரவாளர்கள் சிலர் எதிர்ப்பும் தெரிவித்தனர். இதற்கிடையில் செய்தித்தாள்களும், தொலைக் காட்சி நிறுவனங்களும் குளத்தின் மகத்துவத்தைப் பற்றி பிரபலப்படுத்திவிட்டன.




வாகைக்குளம் பற்றி பேட்டியளிக்கும் திரு. அசன்வாவா

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு.ஜெயராமன், வருவாய் அலுவலர் திருமதி.ரமணசரஸ்வதி, வனப் பாதுகாவலர் திரு.ராம்பதி மற்றும் மாவட்ட வன அலுவலர் திரு.அம்புரோஸ் ஆகியோர் குளத்தினைப் பார்வையிட்டு மரங்களை வெட்டத் தடைவிதித்தனர். தற்போது ஏட்ரி மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரிகளும், வன அலுவலர்களும் இதைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

மு. சுபத்ரா தேவி

## கூவமாகிவரும் தாமிரபரணி

தாமிரம் கலந்த தண்ணீரைக் கொணரும் தாமிரபரணி எண்ணற்ற மூலிகைகளின் சாரத்தைக் கொண்டு நோய் தீர்க்கும் அறுநீர் கொண்ட வற்றாத ஜீவநதியாக மக்கள் வாழ்வில் பெரும்பங்கு வகிக்கிறது.



திருவிழாவின்போது திரண்ட மக்களில் ஒரு பகுதி

இந்நதிக்கரையில் அமைந்துள்ள சொரிமுத்து அய்யனார் திருக்கோவிலில் வருடந்தோறும் ஆடிஅமாவாசைத் திருவிழாவின் போது வந்து பலநாள் தங்கிச் செல்லும் லட்சக்கணக்கான மக்கள் ஆற்றின் கரைகளில் சிறுநீர் மற்றும் மலம் கழிப்பதாலும், அவர்கள் பயன்படுத்தும் சோப்பு மற்றும் ஷாம்புகளில் கலந்துள்ள வேதிப்பொருட்களின் மூலமும் நீர் மாசுபடுவதால் மனிதர்களையும் விலங்கினங்களையும் நீர்வாழ் உயிரினங்களையும் பல்வேறு நோய்கள் தாக்குகின்றன; உயிரிழப்பும் ஏற்படுகிறது.

எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது நீரின் மேல் பரவுகின்ற எண்ணெய்ப் படலமானது நீர் வாழ் உயிரினங்களுக்குத் தேவையான சுவாசவாயு கிடைப்பதைத் தடை செய்வதால் உயிரினங்கள் இறந்துவிடுகின்றன. கடந்த வருடம் எண்ணற்ற ஆமைகள், தலைப்பிரட்டைகள் நீரில் செத்து மிதந்ததைப் பார்த்தோம்.

நதிக்குள் எறியப்படும் உணவுகள், குப்பைகள் போன்றவை நீரோட்டத்தைத் தடைப்படுத்துகின்றன.

இதனினும் நம்மையெல்லாம் அதிர்ச்சியுற வைக்கும் சூழலியல் தீங்கு திருவிழாவின் போது பலி கொடுக்கப்படும் ஆடுகளின் ரத்தம், முடி மற்றும் ஏனைய கழிவுகளும் தாமிரபரணியில் தூக்கி வீசப்படுவதே ஆகும்.

இந்த அவல நிலை மேலும் தொடர்ந்தால் தென்தமிழ்நாட்டின் உயிர்நாடியான தாமிரபரணி, திருநெல்வேலியின் 'கூவம்' சாக்கடையாகவும் கொள்ளை நோய்களின் பிறப்பிடமாகவும் ஆகிவிடும் என்பது உறுதி. மாவட்ட நிர்வாகத்தோடு ஒத்துழைத்து தாமிரபரணியையும் குளங்களையும் பாதுகாப்பது நமது கடமையாகும்.

தாமிரபரணி சந்திக்கும் பிற இன்னல்கள் வரும் இதழ்களில்...

மு. மதிவாணன்

## வீற்றிருந்தான்குளம் - பறவைகள் இழந்த வாழ்விடம்

நவம்பர் மாதத்தில் ஒரு நாள் தெற்குவீரவநல்லூரில் உள்ள பெரிய குளமான வீற்றிருந்தான்குளத்தைக் கடந்து சென்றபோது, அதில் இருநூறுக்கும் மேற்பட்ட பறவைகளைக் கண்டேன். அவற்றில், குளத்தின் ஆழமான பகுதிகளில் காணப்பட்ட கூளக்கிடா, ஊசிவால் சிறவி, சீட்டித்தாரா மற்றும் மூக்கன்தாரா, ஆழம் குறைந்த பகுதிகளில் காணப்பட்ட பவளக்கால் உள்ளான், பட்டாணி உள்ளான் மற்றும் கரண்டி மூக்கன் ஆகியவைகளும் அடங்கும்.

குளத்தின் ஒரு பகுதியை மக்கள் பயன்படுத்துகின்றனர். மறுபகுதியில் மக்கள் நடமாட்டமில்லாததால் பறவைகளும் வாழ்கின்றன. இந்தக் குளம் மக்களும் பறவைகளும் இயைந்து வாழும் குளங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.



சீர்குலைந்த நிலையில் வீற்றிருந்தான்குளம்

தொடர்ந்த நாட்களில் இந்தக் குளத்தை நாங்கள் கவனித்துக்கொண்டிருந்தபோது, ஏப்ரல் மாதத்தில் ஆயிரக்கணக்கான ஆலாக்களையும், நூற்றுக்கணக்கான அரிவாள் மூக்கன்களையும் மற்றும் பலவகையான பறவைகளையும் பதிவு செய்தோம். ஜூன் மாதத்தில் நூற்றுக்கணக்கான பெரியதாராக்கள் மற்றும் நாமக்கோழிகள் போன்ற பறவைகளைப் பார்த்தோம்

முடிவில் 51 வகையான பறவைகள் இக்குளத்திற்கு வருவதை அறிந்தோம். தொடர்ந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் அங்கு சென்றபொழுது, நாங்கள் அதிர்ச்சியடையும் வண்ணம் குளத்தினுள் ஒரு கால்வாயை, குறிப்பாக பறவைகள் வாழும் பகுதியில் வெட்டி முடித்திருந்தார்கள். இதனால் பறவைகள் தங்கள் இரை தேடுமிடம், தங்குமிடம் மற்றும் வாழ்விடங்களை இழந்து நின்றன. கால்வாயின் போக்கினை சற்றே மாற்றியிருந்தால் இக்குளம் ஒரு சிறந்த பறவைகள் வாழிடமாகத் தொடர்ந்திருக்கும். இக்குளத்தைப் போல் மேலும் பல குளங்களும் வளர்ச்சித்திட்டப் பணிகளுக்காக இரையாகிக் கொண்டிருக்கின்றன. இதற்குத் தீர்வுதான் என்ன ?

கி. அபிஷேகா

மொழிபெயர்ப்பு - சி. சங்கரபாண்டியன்

## பறவைகள் கணக்கெடுப்பிற்கு அழைப்பு விடுக்கிறோம்...

திருநெல்வேலி நகர்ப்பகுதி அல்லது கிராமங்களின் ஊடே பயணிக்கும்போது வழிதோறும் கண்கவர் பூக்கள் நிறைந்த நீர்நிலைகளையும் அதில் ஆயிரக்கணக்கில் பறவைகளையும் காண்பது ரம்மியமான காட்சியாகும். சிலசமயம் நூற்றுக்கணக்கான கூளக்கிடாக்கள் மீன் பிடிக்க ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக்கொண்டு இருப்பதைப் பார்க்கமுடியும். நம்மில் பெரும்பாலோர் அவைகளைக் கண்டுகொள்வதில்லை. ஆனால், இதுவே பெங்களூரில் உள்ள ஹெப்பால் குளத்தில் நான்கு கூளக்கிடாக்கள் வந்தாலே அதைப்பற்றிய செய்தி அங்குள்ள நாளிதழ்களில் வெளிவந்துவிடுகிறது; படக்கருவிகளோடு நூற்றுக்கணக்கானோர் குழுமியிருப்பார்கள். ஆனால் திருநெல்வேலிக்கு இயற்கை அளித்த அன்பளிப்பை நாம் உதாசினப்படுத்துகிறோம்.

பறவைகளின் வாழ்விடப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த ஏட்ரி ஆராய்ச்சி நிறுவனம் 'ஈக்கோசிஸ்டம்ஸ் கிராண்டஸ் புரோக்ராம்ஸ்' மூலம் இப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்குப் பறவைகளைக் கண்டறியப் பயிற்சியளித்து பின்னர், அவர்களையும் தேர்ந்த பறவையியல் வல்லுநர்களையும் இணைத்து, வரும் ஜனவரி மாதம் நீர் வாழ் பறவைகளைக் கணக்கெடுப்பதற்காகத் திட்டமிட்டுள்ளனர்.

பொதுவாக ஆக்கிரமிப்பால் குளங்களில் சூழல் சீர்கேடு மிகுந்துவருவதால், நாளுக்குநாள் பறவைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எனவே இந்தக் கணக்கெடுப்பு முக்கியம் வாய்ந்ததாகும்.

'ராம்சர் சைட்ஸ்" என்ற திட்டத்தின் கீழ், நாட்டில் உள்ள பெரியகுளங்களில் மட்டுமே பறவைகளின் கணக்கெடுப்பு



பறவைகளைக் கணக்கெடுக்கும் தன்னார்வலர்

தேசிய அளவில் நடத்தப்படுகிறது. எனவே ஏட்ரி ஆராய்ச்சி நிறுவனத்தின் இந்த முயற்சி சிறிய குளங்களை முதன்மைப்படுத்தும். இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் நாள், தேவைப்படும் தன்னார்வலர்கள் குறித்த விவரங்கள் விரைவில் நாளிதழ்களில் வெளிவரும். இந்த உன்னதமான முயற்சியை வெற்றிகரமாக செயல்படுத்த திருநெல்வேலி மாவட்ட மக்களை அழைக்கிறோம்... வாரீர்...

தி. கணேஷ் & பேட்ரிக் டேவிட்

Ecosystems Grants Programme

EGP

THE NETHERLANDS